# இடி மற்றும் மின்னல்
# செய்ய வேண்டியதும், செய்யக்கூடாததும்

## திறந்தவெளியில் இருப்பின்:

- ✓ திறந்தவெளியில் உள்ளபோது மின்னலின் தாக்கத்திலிருந்து தற்காத்துக்கொள்ள கீழ்கண்ட குறிப்புகள் பயனுள்ளதாக இருக்கும்.
- ✓ வெளிவேளைகளுக்கு செல்வதற்கு முன்பாக அன்றையதின வானிலை முன்னறிவிப்பை தெரிந்துகொண்டு புறப்படவும். இடி மற்றும் மின்னல் பற்றிய எச்சரிக்கை இருப்பின், அந்த வேளையை/பயணத்தை ஒத்திப்போடவும்.
- ✓ இடி இடிக்கும் போது, அருகில் உல்ல ஸ்திரமான/காங்கிரீட் கட்டிடங்களுக்குள் செல்லவும் அல்லது கனத்த மேற்பகுதியுள்ள வாகனங்களுக்குள் சென்று சன்னல் கண்ணாடிகளை மூடிக்கொள்ளவும். தகரக்கூரை உடைய இடங்களை தவிர்க்கவும்.
- ✓ 30/30 விதியை நினைவில் கொள்ளுங்கள். அதாவது, மின்னல் ஒளியை கண்டபின் 30 எண்ணுவதற்குள் இடி ஓசை வருமானால், மறைவிடங்களுக்குள் சென்று கடைசி இடி ஒலி நின்ற 30 நிமிடங்களுக்காவது உள்ளே இருக்கவும்.
- ✓ மறைவிடங்களற்ற திறந்த மலைப்பகுதியில் இருக்கும்படி நேர்ந்தால், உடனடியாக உயரமான மலை முகடுகள், சிகரங்ள் ஆகியவற்றிலிருந்து விரைந்து கீழிறங்கி சமவெளிக்கு செல்லவும். நீட்டிக்கொண்டிருக்கும் பாறை முகடுகளின் கீழ் ஒதுங்கக்கூடாது.
- ✓ ஏரி, குளம், குட்டை போன்ற நீர் நிலைகளிலிருந்து உடனடியாக வெளியேறவும். நீர் நிறைந்த வயல்வெளியில் வேலையிலிருந்தால், அருகிலுள்ள காய்ந்த நிலப்பரப்பிற்கு செல்லவும், குறைந்தபட்சம் வயல்வரப்பிற்காவது செல்லவும்.
- ✓ வெள்ளம் வருவதற்க்கு வாய்பில்லாத தாழ்வான இடங்களில் உள்ள வீடுகள்/மறைவிடங்கள் சிறந்தது.
- ✓ தரையில் படுத்த நிலையில் இருக்கக்கூடாது, இது இடி தாக்கும் வாய்ப்பை அதிகரிக்கும்.

- ✓ மறைவிடங்களற்ற திறந்தவெளியில் இருக்கும்படி நேர்ந்தால், கால்கள் இரண்டையும் மடக்கி குத்தவைத்து, கரங்களால் கால்களை சுற்றி, கைகளால் காதுகளை மூடி, கண்களை மூடி, தலை கவிழ்ந்த நிலையில் அமரவேண்டும். இது இடி நம்மை தாக்கும் பரப்பை குறைக்க உதவும்.
- ✓ பிடரியிலுள்ள மயிர்கால்கள் சிலிர்து நிற்குமாயின், அது மின்னல் உடனடியாக வருவதற்கான சமிக்கையாகும்.
- ✓ மின்சாரம் கடத்த வாய்ப்புள்ள தளவாடங்களான, மின் கம்பிகள், தொலைபேசி கோபுரங்கள், காற்றாலை தகடுகள், இரும்பு வேலிகள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டும்.
- ✓ இடி, மின்னல் வருவத்ற்கு முன்பாகவே மின்னனு சாதனங்களை மின் இணைப்பிலிருந்து துண்டித்துவிடவும்.
- ✓ உயர்மின் அழுத்தங்களிருந்து பாதுகாப்பை தரக்கூடிய மின் காப்பானை வீட்டினில் நிறுவவேண்டும்.
- ✓ மரத்தடியில், குறிப்பாக தனியாக உள்ள மரத்தடியில் ஒதுங்க கூடாது. ஏனெனில், மரங்கள் மின்சாரத்தை கடத்தக்கூடியவை.
- ✓ ரப்பரினால் செய்யப்பட்ட செருப்புகளோ, வாகனங்கலின் டயர்களோ மின்னலிளிருந்து பாதுகாக்காது.
- ✓ வெளியிலுள்ள பறந்து செல்லக்கூடிய, சேதம் விளைவிக்கக்கூடிய பொருட்களை பாதுகாக்கவும்.
- ✓ நுரைத்திண்டு(Foam Pad), உலர்ந்த உலோகங்களற்ற துனிப்பைகளை காலுக்கடியில் போட்டுக்கொள்ளலாம்.
- ✓ இடி இடிக்கும் பொழுது, குழுவாக இருக்க நேர்ந்தால் உடனடியாக பிரிந்து செல்லவும். இது, இடியினால் தாக்கப்படுவோரின் எண்ணிக்கையை குறைக்க உதவும்.
- ✓ தொலைக்காட்சி, வானொலி செய்திகளை தொடர்ந்து கவனிக்கவும், இது அருகிலுள்ள சாலைகளுக்கு செல்லும் பாதை அடைபட்டிருந்தால் அறிய உதவும்.
- ✓ சிறப்பு உதவி தெவைப்படும் குழந்தைகள், சிறுவர்கள், முதியோர்கள் ஆகியோருக்கு உதவி செய்யவும்.
- ✓ அறுந்து கிடக்கும் மின்கம்பிகளிடமிருந்து விலகியிருக்கவும். உடனே மின் வாரியத்துக்கு தகவல் தெரிவிக்கவும்.

- ✓ செல்லப்பிராணிகளை கண்காணித்து உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவும்.

## வீட்டிலோ, உள்ளரங்கிலோ இருப்பின் :

வீடுகள், அலுவலகங்கள், வர்த்தக மையங்கள் முதலியன பாதுகாப்பான இடங்களாக கருதப்பட்டாலும் இடி, மின்னலினால் பாதிக்கப்படும் அபாயம் இருக்கவே செய்கிறது. இதை தவிர்ப்பதற்க்கான சில உபாயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ✓ வானம் இருட்டுகிறதா, காற்றின் வேகம் அதிகரிக்கிறதா என கவனியுங்கள்.
- ✓ நீங்கள் இடியோசையை கேட்க நேர்ந்தால், மின்னலினால் தாக்கப்படும் தொலைவிலிருக்கிறீர்கள் என்று பொருள். உடனே, 30/30 மின்னல் பாதுகாப்பு விதியை நினைவுகூருங்கள். அதாவது, மின்னல் ஒளியை கண்டபின் 30 எண்ணுவதற்குள் இடி ஓசை வருமானால், மறைவிடங்களுக்குள் சென்று கடைசி இடி ஒலி நின்ற 30 நிமிடங்களுக்காவது உள்ளே இருக்கவும்.
- ✓ உள்ளூர் செய்தி ஊடகங்களில் கூறப்படும் எச்சரிக்கைத் தரவுகளை கவனியுங்கள்.
- ✓ வீடு முதலான மறைவிடங்களில் தங்கியிருங்கள். முடிந்தவரை பயணங்களை தவிருங்கள்.
- ✓ கதவுகளையும், சன்னல்களையும் மூடிவைத்திருக்கவும். வீட்டின் வெளிப்புறமுள்ள உடையக்கூடிய, பறந்து செல்லக்கூடிய பொருட்களை பாதுகாப்பாக வைத்திருங்கள்.
- ✓ குழந்தைகளும், செல்லப்பிராணிகளும் வீட்டினுள் இருப்பதை உறுதிசெய்யுங்கள்.
- ✓ தொலைகாட்சிபெட்டி, குளிர்சாதனப்பெட்டி, கணினி உள்ளிட்ட மின் சாதனப்பொருட்களுக்கான மின் இணைப்பை துண்டியுங்கள். இது மின்னல் தாக்கும் போது ஏற்படும் அதிகப்படியான மினனழுத்ததிலிருந்து மின்சார உபகரணங்களை பாதுகாக்க உதவும்.
- ✓ குளிப்பது, பாத்திரம் கழுவுவது போன்ற தண்ணீர் புழங்கும் வேலைகளை செய்யாதீர்கள், ஏனெனில் மின்னல் வீட்டில்

உள்ள குழாய் போன்ற உலோக இணைப்புகள் வழியாக பாய்ந்து செல்லக்கூடியது.

- ✓ வயரின் மூலம் இனைக்கப்பட்ட மின்சார/மின்னணு சாதனங்கள், தொலைபேசிகள் போன்றவற்றை உபயோகிக்காதீர்கள். வயரில்லா சாதனங்களான கைபேசி போன்றவற்றை உபயோகிப்பதில் பிரச்சனையில்லை.
- ✓ கதவு, சன்னல், அனுகு பாதைகள், குளியல் தொட்டி, அடுப்பு மற்றும் மின் கடத்திகளிடமிருந்து விலகியிருங்கள்.
- ✓ திறந்தவெளி கட்டமைப்புகள், விளையட்டு அரங்குகள், பூங்காக்கள், நீச்சல் குளங்கள், கடற்கரைகள் போன்ற இடங்களுக்கு செல்லுதல் கூடாது.
- ✓ காங்கிரீட் தரையில் படுப்பதோ, காங்கிரீட் சுவரில் சாய்ந்து நிற்பதோ கூடாது.

<u>பயணத்தின் போது - செய்ய வேண்டியதும், செய்யக்கூடாததும் :</u>

- ✓ வெளிவேலைகளுக்கு புறப்படும் முன் வானிலை முன்னறிவிப்பில் இடி மற்றும் மின்னல் எச்சரிக்கை உள்ளதா என பார்க்கவும், இருப்பின் இடி/மின்னல் முடிந்த பின் புறபட்டு செல்லவும்.
- ✓ இடி/மின்னல் சமயங்களில் மோட்டார் சைக்கிள் போன்ற திறந்தவெளி வாகனங்களில் பயணிப்பதை தவிர்க்கவும். விளையாட்டு மைதானம், நீச்சல் குளங்கள், பூங்காக்கள், கோல்ப் மைதானம் பொன்ற திறந்தவெளியில் இருப்பதை தவிர்க்கவும்.
- ✓ மிதிவண்டி, மோட்டார் சைக்கிள் போன்ற மின்னலை ஈர்க்கும் வாகனங்கலிலிருந்து இறங்கிவிடவும்.
- ✓ படகிலோ, நீச்சல் குளத்திளோ இருப்பின் உடனடியாக வெளியேறி மறைவிடம் செல்லவும்.
- ✓ இடி இடிக்கும் பொழுது, உறுதியான கூரையுடைய வீடு, கட்டிடம், மறைவிடங்களுக்கு செல்லவும்.
- ✓ மறைவிடம் எதுவும் அருகில் இல்லையெனில், கால்கள் இரண்டையும் மடக்கி குத்தவைத்து, கரங்களால் கால்களை

சுற்றி, கைகளால் காதுகளை மூடி, கண்களை மூடி, தலை கவிழ்ந்த நிலையில் அமரவேண்டும். இது இடி நம்மை தாக்கும் பரப்பை குறைக்க உதவும்.

- ✓ இடியின் போது, உதவி கிடைக்கும் வரை வண்டியிலேயே இருக்கவும். ஜன்னலை மூடிய நிலையில், உலோக பாகங்கள் எதையும் தொடாமல் அமர்ந்திருத்தல் பாதுகாப்பானது. மின்சார வயர்கள், மரங்கள் போன்றவற்றிலிருந்து வாகனத்தை தள்ளி நிருத்தவும்.
- ✓ வனப்பகுதியிலிருந்து விரைவாக வெளியேறி திறந்தவெளிக்கு செல்லவும், ஏனெனில் மின்னலின் தாக்கத்தினால் காட்டுத்தீ ஏற்பட வாய்ப்புள்ளது.

## மின்னல் - முதலுதவி சிகிச்சை :

மின்னலால் தாக்கப்பட்டவர்களுக்கு முறையான மருத்துவ உதவி கிடைக்க தாமதமாகும் போது கீழ்கண்ட முதலுதவிகளை அளிக்கலாம். மின்னலால் தாக்கப்பட்டவர்களை தொடுவதால் எந்த பாதிப்பும் ஏற்படாது.

- ✓ பாதிக்கபட்டவருக்கு மூச்சும், நாடித்துடிப்பும் உள்ளதா என சோதிக்கவும். இதற்கு பொருத்தமான இடம், தாடைக்கு கீழ், கழுத்துக்கு பக்கவாட்டில் அமைந்துள்ள, **Carotid Artery** , என்னும் தமணியாகும்.
- ✓ பாதிகப்பட்டவருக்கு, மூச்சு இல்லையெனில், வாய்க்கு-வாய் முறையில் மூச்சு கொடுக்கலாம். இதயதுடிப்பு இல்லையெனில், இதயத்தை அழுத்தும் முறையின் மூலம் இதத்துடிப்பை மீட்க முயலலாம்.
- ✓ மின்னலின் தாக்கத்தால் உயரமான இடங்களிலிருந்து விழுந்ததன் மூலம் எலும்பு முறிவோ, ரத்தப்போக்கோ உள்ளதா என சோதிக்கவும்.
- ✓ தொடர்ந்து மின்னலின் தாக்கம் ஏற்படும் சாத்தியகூறு இருப்பின் பாதிக்கபட்டவரை உடனடியாக அருகிலுள்ள பாதுகப்பான இடத்துக்கு தூக்கி செல்லவும்.
- ✓ மின்னலின் தாக்கத்திற்கு ஆளானவர்களிடம் எந்த மின்னோட்டமும் இருக்காது என்பதால், அவர்களை கையாளுவதில் எந்த ஆபத்துமில்லை.
- ✓ பாதிக்கப்பட்டவ்ருக்கு, எலும்பு முறிவு, கேட்கும் திறனிழப்பு, பார்வை குறைபாடு உள்ளதா என சோதிக்கவும்.

- ✓ மின்னலால் பாதிக்கபட்டவர்கள் தீக்காயங்கள், அதிர்ச்சி என பலதரப்பட்ட பாதிப்புக்கு ஆளாகலாம் என்பதால் உடலில் மின்னல் தாக்கிய இடத்தை ஆராயவும்.
- ✓ 1078 என்ற உதவி எண்ணுக்கு தகவல் தெரிவித்து, பாதிக்கப்பட்டவரை பற்றிய விபரங்களையும் சம்பவ இடத்துக்கு வரும் வழியையும் தெளிவாக குறிப்பிடவும்.
- ✓ இடி/மின்னலால் பாதிக்கப்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவும்.

## இடி மற்றும் மின்னல் : விவசாயம் தொடர்பாக செய்ய வேண்டியதும், செய்யக்கூடாததும்

### செய்ய வேண்டியவை :

- ✓ இடியினால் ஏற்படும் சூரைக்காற்றிலிருந்து பழம், காய்கறிச் செடிகள் போன்ற சிறு தாவரங்களுக்கு தாங்கிப்பிடிக்கும் ஏற்பாடுகளைச் செய்யவும்.
- ✓ வயலில் விவசாயிகள் இருக்கும் போது பாதுகாப்பான மறைவிடம் எதுவும் அருகில் இல்லையெனில், உயரமான பொருட்களுக்கு அருகிலோ, தனி மரங்களுக்கு அருகிலோ செல்லாமல், திறந்த வெளியில் இருப்பது சிறந்தது.
- ✓ வளர்ப்பு பிராணிகளை, திறந்த நீர் நிலைகள், குளங்கள், ஆறுகள் போன்றவற்றிலிருந்து விலகியிருக்கும்படி பார்த்துக்கொள்ளவும்.
- ✓ வளர்ப்பு பிராணிகளை, ட்ராக்டர் மற்றும் உலோகத்தினால் ஆன விவசாய உபகரணங்களிலிருந்து விலகியிருக்கும்படி பார்த்துக்கொள்ளவும்.
- ✓ வளர்ந்த பயிர்களுடைய வயலிலிருந்து உபரி நீரை வடிகட்டவும்.
- ✓ அறுவடை செய்யப்பட்டு களத்தில் உள்ள தானியங்களை பாலித்தீன் உறைகொண்டு மூடிப் பாதுகாக்கவும்.

### செய்யக் கூடாதவை:

- மின் கம்பிகள், மின் உபகரணங்களுடன் தொடர்புகொள்ளக் கூடாது.
- உலோகத்தினால் ஆன விவசாய உபகரணங்கள், ட்ராக்டர், மிதிவண்டி போன்றவற்றை கையாளக்கூடாது.
- உங்கள் வளர்ப்பு பிராணிகள் மரத்தடியில் ஒதுங்காதவாறு பார்த்துகொள்ளவும். அவைகளை கண்காணித்து உங்கள் நேரடிப்பார்வையில் வைத்திருக்கவும்

குறிப்பு : மாநில அரசுகள், தங்கள் அனுபவங்கள் மற்றும் சிறந்த அணுகுமுறைகளுக்கு ஏற்ப, இப்பகுதியை மாற்றி அமைத்துக்கொள்ளலாம்.

*****